கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
★ ★ ★
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

S.M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

சுடர் 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 28 வெள்ளிக்கிழமை (13-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 283

## யாழ். மாவட்டத்தில் பதவியிழந்திருக்கும்

# ஈரோஸ் எம்.பிக்கள் 9 பேரின்

# ஆதரவை பெற பிரேமா முயற்சி

## இது குறித்து புலிகளுடன் பேச தூதுவரை அனுப்பவும் திட்டம்

கொழும்பு. செப்டெம்பர் 13

தமக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் குற்ற விசாரணைப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு. தற்சமயம் பதவியிழந்திருக்கும் யாழ். மாவட்டத்தின் சுயேச்சைக் குழு (ஈழவர் ஜனநாயக முன்னணி) எம்.பிக்கள் ஒன்பது பேரினதும் ஆதரவைப் பெற ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா முயற்சித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஒன்பது எம், பிக்களின் இடத்துக்கும் புதிதாக ஒன்பது பேரை நியமித்து, நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு ஆதரவாக அவர்களை வாக்களிக்கச் செய்வது குறித்து, விடுதலைப் புலிகளுடன் பேசி இணக்கம் காண்பதற்காக விசேட தூதர் ஒருவரை யாழ்ப்பாணம் அனுப்பவும் திரு.பிரேமதாஸா முடிவு செய்திருக்கிறாராம்,

ஈரோஸ் இயக்கத்தின் வெகுஜன அமைப்பான ஈழவர் ஜனநாயக முன்னணி 1989 பொதுத் தேர்தலின் போது, யாழ் மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டு ஒன்பது நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்டதும்—

1990 ஜூனில் அரசுப் படைகள்—விடுதலைப் புலிகள் யுத்தம் வெடித்ததைத் தொடர்ந்து இந்த எம் பிக்கள் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்ததினால் தமது பதவிகளை இழந்தனர் என்பதும்—

பின்னர் ஈரோஸ் அமைப்பு கலைக்கப்பட அதன் முன்னணி உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து கொண்டனர் என்பதும் தெரிந்தவையே.

இப்போது பதவியிழந்த எம். பிக்களின் இடத்திற்கு புதியவர்களை நியமிப்பது சம்பந்தமான அதிகாரத்தைக் கையாளக் கூடிய வல்லமை விடுதலைப் புலிகள் வசம் இருப்பதாகக் கருதப்படுகிறது.

ஆகவே புதிதாக ஒன்பது எம். பிக்களையும் நியமித்து அவர்களை நாடாளுமன்றத்தில் தமக்கு ஆதரவு வழங்கச் செய்யுமாறு விடுதலைப் புலிகளிடம் ஜனாதிபதி பிரேம

(3 ஆம் பக்கம் பார்க்க)

### சட்டத்தரணிகளுக்கு அழைப்பு

யாழ். மாநகரசபையில் வசிக்கும் சட்டத்தரணிகள் அனைவரையும் இன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையுள்ள நேரத்தில் யாழ். தமிழீழ காவல்துறை அலுவலகத்துக்கு சமுகம் தருமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

### விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணத்தில் நேற்று மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் மற்றும் சில பொருள்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டன.

கொழும்பில் இருந்து லொறிகள் சில வந்ததை அடுத்தே விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

### ஆனையிறவில் 5 படையினர் பலி!

யாழ்ப்பாணம், செப். 13

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர்.

படையினர் தமது பாதுகாப்பிற்காக காவலரண்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சமயமே, அவர்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## பல இடங்களில் தமிழீழ ஆதரவு மாநாடுகள்; தடுக்கவே புலிகள் இயக்கத்துக்குத் தடை!

புதுடில்லி, செப். 13

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விசேட நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படுவதுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு இந்தியாவில் தடை விதிக்கும் உத்தரவும் வெளியாகலாம்.

— இப்படி மாநிலப் பொலீஸாரும் மத்திய புலனாய்வு ஏஜன்ஸியினரும் கருதுகின்றனர் என்று 'டெய்லி நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

தமிழீழக் கொள்கை மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியவற்றுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் பரவலாக 'மாநாடுகள்' நடத்தப்படுகின்றன. இது பொலிஸாருக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளதாம்,

இம் மாநாடுகளில் சராசரி 50 பேர் வரையில்தான் கலந்து கொண்டு வருகிறார்கள். என்றாலும், அம்மாநாடுகள் பல இடங்களில் நடத்தப்படுவதும் அம் மாநாடுகள் சம்பந்தமான செய்திகளுக்கு பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுப்பதும் இது போன்ற மாநாடுகளை ஏனையோரும் நடத்தத் தூண்டுவதாக உள்ளன என்று கூறப்படுகிறது.

இப்படியான மாநாடுகள் மற்றும் கூட்டங்களில் கலந்து கொள்பவர்களை எந்தச் சட்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### பொன்னாலையில் ஷெல் ஒருவர் காயம்

காரைநகரில் இருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணிக்கு பொன்னாலைக் குடியேற்றப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இச்சம்பவத்தில் காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடியில் இருந்து இடம்பெயர்ந்த லட்சுமணன் (வயது 51) என்பவர் காயமடைந்தார். வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

இதேவேளை காரைநகர் சவுக்கடி கடற்பிராந்தியத்தில் இருந்து படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தினர். (ஓ-15)

### போராட்டம் தொடரும் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, செப். 13

இன்றைய நெருக்கடி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, மறைந்திருந்த ஜே. வி. பி. தீவிரவாதிகள் வெளியே தலைகாட்டத் தொடங்கியுள்ளனர்.

ஜே. வி. பி. யினரின் முக்கிய பகுதியான தென்மாகாணம், மாத்தறையில் அவர்களின் நடமாட்டம் மீண்டும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறையை அண்டிய திக்வெல்லைப் பொலீஸ் பகுதியில் உள்ள நாவரஹேனையில் ஜே. வி. பி. யினரின் சுவரொட்டிகள் மீண்டும் காட்சியளிக்கின்றன.

அவற்றில் ''மீண்டும் எமது போராட்டத்தை தொடருவோம்'', ''மக்களுக்கு விடுதலை, விமோசனம் என்பவற்றை பெற்றுத் தருவோம்'' போன்ற வாசகங்கள் காணப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்நாடு பல்கலைக்கழகத்தில்

## புலிகளின் புகழ்பாடும் கவிதையை நீக்க உத்தரவு

கொழும்பு, செப். 13

தமிழ்நாடு பல்கலைக் கழகம் ஒன்றின் பாட நூலில் விடுதலைப் புலிகளைப் புகழ் பாடும் விதத்திலும் இந்திய அமைதி காக்கும் படையை அவதூறு செய்யும் விதத்திலும் எழுதப்பட்டுள்ள கவிதை நீக்கப்பட உள்ளது.

இதற்கான உத்தரவை தமிழக அரசு கடந்த செவ்வாய்க்கிழமை விடுத்தது.

திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் எம். ஏ. தமிழ் பட்டப் படிப்புக்கான பாட நூலிலேயே இக்கவிதை இடம் பெற்றுள்ளது.

இந்தப் பாட நூல் 1989 இல் பிரசுரிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட கவிதையை கவிஞர் அப்துல் ரஹ்மான் இயற்றியிருந்தார். (இ-எ)

## 4 அதிகாரிகள், 36 படையினர் மணலாறு மோதலில் பலி!

கொழும்பு, செப். 13

மணலாறுப் பகுதியில் கடந்த பன்னிரண்டு தினங்களாக இடம்பெற்று வரும் கடும் சண்டையில் நான்கு இராணுவ அதிகாரிகள் உட்பட நாற்பது படையினர் உயிரிழந்திருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சண்டையில் 35 படையினர் உயிரிழந்ததாகவும் சுமார் 50 படையினர் வரை காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளரான கேணல் சரத் முனசிங்க தெற்றுத் தெரிவித்தார்.

காட்டுப்பகுதி ஒன்றில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையில் இதுவே மிகப் பெரியது என்றும் அவர் சொன்னார்.

முல்லைத்தீவு, மணலாறு, நெடுங்கேணி, அலம்பில், நித்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மன்னிப்புச் சபை ஸ்ரீலங்கா மீது குற்றச்சாட்டு

லண்டன், செப். 13

ஸ்ரீலங்கா அரச படையினர் மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்: அங்கு பல்லாயிரக் கணக்கில் நிராயுதபாணிவான பொதுமக்களை அவர்கள் கொலை செய்தும், கைது செய்தும் வருகின்றனர்,

கடந்த 15 மாத காலத்தில் ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக லண்டனில் உள்ள சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களை கொலை செய்தால், அல்லது கைது செய்தால் தாம் தண்டிக்கப் படுவோம் என்ற அச்சம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### மணலாறில் மின்னல் தாக்கு!

கொழும்பு, செப். 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைக்கு 'அகுலபஹர' (மின்னல் தாக்குதல்) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இத்தகவலை ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளரான கேணல் சரத் முனசிங்க நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார். [உ-எ]

## சித்தாண்டியில் பொலீஸ் நிலையம்

# புலிகளின் தாக்குதலில் வீழ்ந்தது!

### பத்து பொலீஸார் பலி!! பெருமளவு ஆயுதங்களும் மீட்பு!!!

யாழ்ப்பாணம், செப். 13

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சித்தாண்டி பொலிஸ் நிலையம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நடத்தி அதனைக் கைப்பற்றினர், அங்கு நடந்த ஒன்றரை மணி நேரச் சண்டையில் பத்துப் பொலிஸார் கொல்லப்பட்டனர். ஒருவர் பிடிபட்டார். பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்;

சித்தாண்டிப் பொலிஸ் நிலையம் மீது [illegible] நடந்த அதே சமயத்தில் [illegible] இருந்து 300 யார் தொலைவில் உள்ள மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் மீதும், 800 யார் தொலைவில் உள்ள மாவடி ஓடை இராணுவமுகாம் மீதும் [illegible] படையினரை வெளியேற விடாது தடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினருடன் நடந்த மோதல்களில் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

சித்தாண்டி பொலிஸாருக்கான இராணுவ உதவி தடுக்கப்பட்டதை அடுத்து ஹெலி ஒன்று பொலீஸ் நிலையப் பகுதியில் கடும் துப்பாக்கித் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வரு

(3 ஆம் பக்கம் பார்க்க)

### 6 வேங்கைகள் வீர மரணம்

சித்தாண்டிப் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஆறு வேங்கைகள் களப்பலியாகினர்.

வாமன் (மார்க்கண்டு தேவன் - காரைதீவு), ஜெய்கணேஷ் (நமசிவாயம் ரஜனிகாந் - கல்முனை), சுந்தரம் (கந்தையா யோகராசா - கோரகல்லிமடு), மதன் (சோமசுந்தரம் - களுவாஞ்சிக்குடி), பிரேம்குமார் (விநாயகமூர்த்தி ரவிச்சந்திரன் - விநாயகபுரம்), வில்லியம் செல்வராசா - அம்பலாங்கொட) ஆகிய போராளிகளே வீர மரணமடைந்தனர். [ஓ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ். 32 வயதுள்ள G. C. E. படித்த ஆறு வருடங்களாக ஜேர்மனியில் பணிபுரியும் திக்கு வாயுற்ற, சொத்துக்கள் நிரம்பிய, அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் கவனிக்கப்படமாட்டாது. தொடர்பு: இல. 351. மே/பா உதயன் யாழ்ப்பாணம். [18069]

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைசுற்றல், சூதகக்குத்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4265]

## துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும் மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம் புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். [4294]

## கராட்டி வகுப்புகள்

புதிய கராட்டி வகுப்புகள் 14 - 09 - 91 சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகின்றன. குறிப்பு: வழமையான வகுப்புகள் சனி, ஞாயிறு கிழமைகளில் மாலை 4-30 மணிக்கு நடைபெறுகின்றன. ஆசிரியர்கள் க. கணேசலிங்கம், கு. ரஞ்சோர்ச்சன். [18095]

## நீலன் கருத்து

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது ஜனநாயக விரோத செயல் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் நீலன் திருச்செல்வம் சர்வதேசப் பத்திரிகையாளர் சங்கக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். [இ-எ]

---

# NEW SCIENCE HALL

KANNATHIDY ROAD, JAFFNA.

## 91 A/L

## PAPER CLASS *Sat. & Sun.*

**PHYSICS** — சோதிலிங்கம்
- பிரிவு I 8-00 — 9-00
- பிரிவு II 12-00 — 1-00

**CHEMISTRY** — மணியம்
- பிரிவு I 9-00 — 10-00
- பிரிவு II 3-00 — 4-00

**PURE / APPLIED MATHS** — வெக்டர்
- பிரிவு I 6-00 — 8-00

**ZOOLOGY** — தம்பிராஜா
- பிரிவு I 2-00 — 3-00

## DAY PAPER CLASS

**BOTANY** — குணசீலன்
Mon., Wed. 9-00 — 11-00

**PHYSICS** — கணேசன்
Mon., Wed. 8-00 — 9-00

**CHEMISTRY** — சண்
Mon 11-00 — 12-00, Tue. 8-00 — 10-00

**PURE & APP.** — சந்திரமோகன்
Tue., Wed. 2-00 — 4-00

(சி. 0488)

---

யாழ். / மாவட்ட மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

## அரசாங்க எழுதுனர் சேவை
## கிராம அலுவலர் (G.S.) சேவை

யாழ். மாவட்டத்திலுள்ள 590 க்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

போட்டிப் பரீட்சை

## விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 14-09-1991 மு. ப. 9 மணி

பாடநெறி:- மொழித்தேர்ச்சி, பொது உளச்சார்பு

விண்ணப்ப முடிவு திகதி: 30-09-1991

★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 290/- முழுப்பயிற்சிக்கும்
★ விரிவுரைகள் சனியும், ஞாயிறும்

விண்ணப்பப் படிவங்களை நேரில் பெறலாம்.

# ASTAN INSTITUTE

101/10, STANLEY ROAD, - JAFFNA

(மக்கள் வங்கிக்கருகாமையில்)

[சி-0502]

---

சுகாதார அமைச்சு

கவனிப்பாளர்கள் (பரிசாரகர்கள்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புப்

# போட்டிப் பரீட்சை - 1991

சுகாதாரத் திணைக்களத்தில், மேற்கூறிய பதவிகளுக்கென, பின்வரும் தகைமைகளுடைய 18 வயதிற்கும் 40 வயதிற்குமிடைப்பட்டவர்களும் இலங்கைப் பிரஜைகளுமான ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) கல்வித்தகைமைகள் - விண்ணப்பதாரிகள் /சிரேஷ்ட கல்வித் தராதரச் சான்றிதழ் அல்லது கல்விப் பொதுத்தராதரப்(சாதாரணம்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், கணிதம்/எண் கணிதம்/வர்த்தக எண் கணிதம் ஆகிய பாடங்களுட்பட ஆறு பாடங்களில் அல்லது என். சி. ஜீ. ஈ பரீட்சையில் முதல் மொழியும், கணிதமும் உட்பட ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் 1991 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதிவன்று பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், மலேவீதி, கொழும்பு 02, என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(2) வயதெல்லை-18 வயதிற்கும் 40 வயதிற்குமிடைப்பட்டவர்கள்.

வேறு தேவையான சகல விவரங்களுக்கும் 23 - 08 - 91 திகதியிடப்பட்ட இலக்கம் 677 வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்க.

டாக்டர், ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/0490)

---

# விண்ணக வாழ்வில்
# 8 ஆம் ஆண்டு நினைவு



திருமதி
## சுதந்திரநாயகி இளேற்றன்
[தேவி]

மலர்வு: 10 - 02 - 1948 உதிர்வு: 14 - 09 - 1983

இவரின் ஆத்ம சாந்திக்காக நாளை (14-09-1991) சனிக்கிழமை காலை 5-00 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரம தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் பங்கு கொண்டு ஆத்ம இளைப்பாற்றிற்காக மன்றாடுமாறு வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
தாய், சகோதர, சகோதரிகள்.

16, [illegible],
யாழ்ப்பாணம்.

(0481)

---

உரும்பிராய்

# சிதம்பரசுப்பிரமணிய சுவாமி கோவில்

## நிர்வாக மாற்றம்

மேற்படி ஆலய மண்டபத்தில் 25 - 08 - 91 மாலை 3 மணிக்கு நடைபெற்ற பொதுச்சபை கூட்டத்தில் சபையோர் ஏகமனதாக ஐந்து உறுப்பினர் கொண்ட இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட்டு, ஆலய நிர்வாகம் 01 - 09 - 91 முதல் இடைக்கால நிர்வாக உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டது. இன்றிலிருந்து இடைக்கால நிர்வாகத்துடன் மேற்படி ஆலய விடயமாக ஆலயத்தில் செயல்படும் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

12 - 10 - 91 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு மகாசபை கூடி புதிய பரிபாலன சபையை தெரிவு செய்யும்.

இடைக்கால நிர்வாக சபை,
உரும்பிராய்.
09 - 09 - 91

(சி-0491)

---

# நாகலிங்கம் கல்விநிலையம்

## A/L 92 பௌதிகவியல்

வெப்பவியல் ஆரம்பம்: 15 - 9 - 1991

திரு. N. பத்மநாதன் B. Sc.

## A/L 91 விலங்கியல் வினாவிடை

நடைபெறுகின்றது

திரு. நாகநாதன் [4293]

---

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

★ கலை முதற் தேர்வு (G. A. Q.)
★ வணிக முதற் தேர்வு (1 st. in Com)

பிரத்தியேக
**பொருளியல் வகுப்பு**
S. வரதராஜன் B. A: (Hons)

ஆரம்பம்: 14 - 09 - 1991 சனி 5-00 p.m.

குறிப்பு:- மாணவிகள் மட்டுமே இவ் வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படுவர்.

## பொருளியல் கல்வி நிலையம்,

200, பிரதான வீதி, சுண்டிக்குளி.

(சென்ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

(சி-0483)

---

# பாரதிதாசன்

## கல்வி நிறுவனம்

## (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக்கழக

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

## G. A. Q; 1st in Com.

★ பொருளியல் ★
S. வரதராஜன் B. A. (Hons)

ஆரம்பம்: 15 - 09 - 1991 ஞாயிறு

பிரிவு I 11.00 a.m.
பிரிவு II 1.00 p.m.

முக்கிய குறிப்பு:
1. மாணவர்கள் முன்கூட்டியே அனுமதி பெறல் வேண்டும். விரிவுரைகள் ஆரம்பமாகிய தினத்திற்குப் பின்னர் அனுமதிகள் வழங்கப்படமாட்டா.
2. விரிவான பாடத்திட்டக் குறிப்புகள்; மாதிரி வினாத்தாள்கள் என்பன ஆரம்ப விரிவுரையின் போது வழங்கப்படும்.

[சி-0485]

---

# ★ திருமண அழைப்பு ★

நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஆவணித் திங்கள் 29 ஆம் திகதி (14 - 09 - 1991) சனிக்கிழமை காலை 8-19 — 8 59 மணி வரையுள்ள துலாலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| எமது புத்திரன் திருவளர் செல்வன் **செயலோக இராசதுரை** அவர்களுக்கும் | எமது ஏகபுத்திரி திருவளர் செல்வி **சுகன்யா** அவர்களுக்கும் |
|---|---|

மணமகள் இல்லத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி ந. நடராசா,
மாமுனை, செம்பியன்பற்று.

திரு. திருமதி வ, சிவானந்தன்,
செட்டித்தெரு,
பருத்தித்துறை.

[18094]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### தவறுக்குப் பிராயச்சித்தம்

சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது! பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்குப் பல சலுகைகளைச் செய்வது சம்பந்தமாகப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் சுற்றுநிருபம் ஒன்றையும் விடுத்துள்ளார்.

சரியாக 35 வருடங்களுக்கு முன்னர் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சிங்களப் பேரினவாதம் தனது வழியில் இந்நாட்டு அரசியலை இட்டுச் செல்வதற்கு ஊத்திய முதலாவது முத்திரையும் அதுவே.

இந்த நாடு இப்போது அனுபவிக்கும் சகல விதமான இன்னல்களுக்கும், கஷ்டங்களுக்கும் சிங்களம் மட்டும் சட்டமே அத்திவாரக்கல் என்று கூறலாம். அப்போது நியாய சிந்தையுடன் அரசியலை நோக்கிய கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா கூறியது போல, 'ஒரு மொழி; இரு நாடுகள்'' என்ற நிலைக்கு வித்திட்டதும் சிங்களம் மட்டுமே சட்டமே.

அதே போல, சிங்களம் மட்டும் சட்டம், இந்த நாட்டில் இனத் துவேசத்தை விதைத்து, வளர்த்து, அறுவடை செய்து அதன் மூலம் இன மோதல்களுக்கும், வன்செயல்களுக்கும், இப்போதைய தமிழர் அழிவுகளுக்கும் வழி செய்தது என்பதை மறந்துவிட முடியாது.

தமிழர்களின் மொழி உரிமையைப் பறித்து, அதனை ஆரம்பமாகக் கொண்டு அவர்களின் சகல உரிமைகளையும் பறித்து அவர்களை அடக்கி ஆள்வதே சிங்களப் பேரினவாதத்தின் அப்போதைய சிந்தனையாகவும், செயற்பாடாகவும் இருந்தன. ஆனால் தமிழர்கள் அந்தளவுக்குச் சோணகிரிகளாக இருக்கவில்லை.

சிங்களப் பேரினவாதத்தின் சகல அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராட அவர்கள் வீறுடன் எழுச்சி பெற்றார்கள். சிங்களம் மட்டும் சட்டம் தொடக்கம் 1972 இன் அரசமைப்பு வரை, அதற்குப் பின்னர் வந்த சகல கொடுமைகளையும், அநீதிகளையும் எதிர்க்கத் துணிந்தார்கள்.

எண்ணிக்கையில் குறைந்த சிறுபான்மையினர் என்பதால் தம்மிடம் ஆட்பலம் இல்லையே என்று பின்னுக்கு நிற்கவில்லை. உயிரைக் கொடுத்தாவது உரிமையைப் பெறுவோம் என்ற உணர்வுடன் சகல அடக்குமுறை நடவடிக்கைகளையும் எதிர்த்தார்கள். எதிர்த்துப் போராடிக் கொண்டே இருக்கிறார்கள்.

அதன் விளைவாகவே, சிங்களவர்கள் 35 வருடங்களுக்கு முன்னர் தாம் இழைத்த மாபெரும் தவறை இப்போது திருத்த முனைந்துள்ளார்கள்! திருத்த வேண்டிய கட்டாயம் உண்டாகியது. அநீதி எப்போதாவது ஒரு நாள் களையப்பட்டாகும் என்பதையே இது காட்டுகிறது. தவறு விடுபவன் அதற்குப் பிராயச்சித்தம் செய்தாக வேண்டிவரும் என்பதற்கும் இது நல்லதோர் உதாரணம்.

இப்போது, தமிழர்களின் தனி அரசு உரிமையை, சுயநிர்ணய உரிமையை, சிங்கள அரசுகள் மறுத்து, இராணுவ யுத்தங்களை நடத்தி வருகின்றன. இன்னும் சில வருடங்களில் இந்தத் தவறை உணர்ந்து, அந்த உரிமைகளை வழங்க வேண்டிய கட்டாயத்துக்கு அவை ஆளாகும் என்பது திண்ணம். அவை மனம்திருந்த மறுத்தால் நாடு இரண்டாகப் பிரிந்து போகும் நிலையைக் கண்டு கவலைப்பட நேரிடலாம்!

## உபவேந்தருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். பல்கலைக்கழக உபவேந்தராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் அ. துரைராஜாவுக்கு வரவேற்பு உபசார விழா ஒன்று இன்று பிற்பகல் 2-45 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். பலர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

விழா ஆரம்பத்தில் கோண்டாவில் வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி ஆகியோரின் விசேட கச்சேரி இடம்பெறும். [இ-3]

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், செப். 13

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியால் நடத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தடகள விழாவின் மாவட்ட மட்டப் போட்டியான மரதன் ஓட்டப்போட்டி 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி காலை 6 00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி காலை 6-30 மணிக்கு சுன்னாகம் சந்தியிலும் ஆரம்பமாகும்.

போட்டியாளர்கள் குறித்த நேரத்திற்கு போட்டி ஆரம்பமாகும் இடத்தில் சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். [இ]

## முதலுதவி பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். கல்விக் கோட்ட முறைசாராக் கல்வி உபவள நிலையம் ஒழுங்கு செய்துள்ள முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் நாளை 14 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை நடைபெறும்.

கிழமை நாட்களில் பிற்பகல் 3 மணிக்கும், சனி, ஞாயிறு தினங்களில் காலை 8 30 மணிக்கும் வகுப்புகள் நடைபெறும். [த]

## வைத்தீஸ்வரா பவள விழா

யாழ்ப்பாணம், செப் 13

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் பவள விழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கும் கலை விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் வித்தியாலயத்தின் ''அம்பிகை பாகன்'' அரங்கில் நடைபெறவுள்ளன.

பரிசளிப்பு விழாவில் யாழ். பல்கலைக்கழக கல்வித் துறைத் தலைவர் திரு. வ. ஆறுமுகம் பிரதம விருந்தினராகவும், யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

கலைவிழாவில், பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் திரு. இ. முருகையன் பிரதம விருந்தினராகவும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர் கவிஞர் திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். [அ-5]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 13

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் மோதலில், நேற்று முன்தினம் கோபிநாத் [வேலுப்பிள்ளை புஷ்பராசா - உடுவில் தெற்கு] என்பவரும், கடந்த திங்கட்கிழமை நேசன் [சிவநேசன் சிவசங்கர் - மானிப்பாய்] என்பவரும் வீரமரணமடைந்தனர்.

## சிமெந்து ஊழியர் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், செப். 13

சிமெந்துக்கூட்டுத்தாபன தொழிலாளர் யூனியன், இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இயங்கும் சுற்றாடல் அலுவலகத்தில் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

சகல ஊழியர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யூனியன் தலைவர் கேட்டுள்ளார். [ஓ]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 13

வலிகாமம் பகுதி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல், இன்று மாலை 4 மணிக்கு மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் நடைபெறவுள்ளது. [ஓ]

## சிறுவனின் கை துண்டிப்பு

கட்டி, அரைகுறை நிலையில் இருந்த மேல் மாடியில் இருந்து, தவறி விழுந்த சிறுவன் மீது 'கொங்கிறீட்' கற்கள் சேர்ந்து விழுந்ததில், அவனது வலது கை துண்டிக்கப்பட்டது.

யாழ். பெருமாள் கோவிலடியில் நேற்று கடந்த இந்தச் சம்பவத்தில், அன்னசத்திர ஒழுங்கையைச் சேர்ந்த மகேந்திரம் சுசீந்திரன் [10 வயது] என்ற சிறுவனே கையை இழந்தான். [ஓ-15]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 13

'வடபிரதேசத்தில் நிர்வாக மையத்துக்கான இடவமைவுத் தெரிவு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு, நாளை காலை யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

காலை 9 மணிக்கு தொடங்கும் கருத்தரங்கு மாலை 5-30 மணிவரை நடைபெறும்.

## 4 அதிகாரிகள் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலைக்குளம் ஆகிய பகுதிகளிலேயே கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

வவுனியா, அனுராதபுரம் படை முகாம்களிலிருந்து இப்பகுதிகளை நோக்கி மாறி மாறி பொம்மர்கள், விமானங்கள், ஹெலிகள் சென்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மணலாறு மோதலில் தமது தரப்பில் இதுவரை 60 போராளிகள் வீரமரணமடைந்திருப்பதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ-3-5]

## ஈரோஸ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாஸா தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நேரில் பேசி, இணக்கம் காண்பதற்காக ஜனாதிபதி பிரேமதாஸாவின் விசேட தூதுவர் ஒருவர் கொழும்பில் இருந்து புறப்பட்டிருப்பதாகவும் அறியவந்தது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் முயற்சி குறித்து விடுதலைப் புலிகள் தரப்பு கருத்துக்களை உடனடியாக அறிய முடியவில்லை. (உ-3)

## பல இடங்களில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டத்தின் கீழ் கைது செய்வது என்ற இக்கட்டான நிலையைத் தவிர்க்கவே, விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்ற ஆலோசனையை பொலீஸாரும், அதிகாரிகளும் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# வியாபாரிகளுக்கான பாஸ்; ஏற்பாட்டில் சில மாற்றங்கள்

யாழ்ப்பாணம், செப். 13

வியாபார நோக்கத்துக்காக வவுனியா செல்வோரின் பிரயாண அனுமதியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

புதிய ஒழுங்கு முறையின்படி ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் வாரத்தில் ஒரு தடவை மாத்திரமே பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்பது தெரிந்ததே.

★ வவுனியா, மன்னார் மாவட்டங்கள்—சனி, ஞாயிறு

★ கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்கள்—திங்கள், செவ்வாய்

★ யாழ். மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்கள்—புதன், வியாழன் ஆகிய ஒழுங்கில் அனுமதிக்கப்படுவர்.

★ ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒழுங்கில் அனுமதி வழங்கப்படும்.

வெள்ளிக்கிழமைகளில் மேலதிகமாக இடம் இருப்பின் மாத்திரம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

இப்புதிய நடைமுறை நாளை மறுதினம் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது. (ஓ)

# தமிழ் போராளிகளை அடக்க தேசிய பாதுகாப்புச் சட்டம்

## ஜெயலலிதா ஆலோசனை

சென்னை, செப். 13

தமிழகத்தில் இருந்து இலங்கைத் தமிழ்ப் போராளிகள் முற்றாக விரட்டியடிக்கப்படுவார்கள். இது சாத்தியப்படாவிட்டால் மாநிலத்தில் தேசிய பாதுகாப்புச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இப்படித் தெரிவித்தார் என்று ''இந்து'' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள தீவிரவாதக் குழுவான புரட்சிகர இளைஞர் முன்னணியும் விடுதலைப் புலிகள் இயக்கமும் இரகசியக் கூட்டம் நடத்தி இருப்பதாக புலனாய்வு பொலீஸாருக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் 'இந்து' செய்தி கூறுகிறது.

புரட்சிகர இளைஞர் முன்னணி பற்றி தெளிவான தகவல் கிடைத்திருப்பதாகவும் அம்முன்னணியைச் சேர்ந்தவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [இ-எ]

# ஸ்ரீலங்காவை ஜப்பான் அரசு நிர்ப்பந்திக்க வேண்டும்

## மன்னிப்புச் சபை கோரிக்கை

டோக்கியோ, செப். 13

மனித உரிமைகளைப் பேணும் விஷயத்தில் அதிக அக்கறை காட்டும்படி ஸ்ரீலங்கா, பர்மா மற்றும் சீனா ஆகிய நாடுகளை ஜப்பான் அரசு நிர்ப்பந்திக்க வேண்டும் என்று சாவதேச மன்னிப்பு ச்சபை கேட்டுள்ளது.

இம்மூன்று நாடுகளிலும் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து மன்னிப்புச் சபை ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாக சபையின் தலைவர் பீற்றர் டபி ஜப்பான் பிரதமர் ரோஷிகி கைபுவிடம் தெரிவித்திருக்கிறார்.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபையின் தலைமைப் பதவியில் இருந்து திரு. பீற்றர் டபி விலகுகிறார்.

அதற்கு முன்னர் திரு. டபி ஜப்பான் — யொகொஹமா நகரில் கடந்த ஒரு வார காலமாக நடைபெற்ற மன்னிப்புச் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

1990களில் ஆசியாவில் மனித உரிமைகளை பேணும் பணியில் மன்னிப்புச் சபை கூடுதல் அக்கறை காட்டும் என்று மன்னிப்புச் சபையின் பொதுச்சபைக் கூட்ட முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மன்னிப்புச் சபையின் உறுப்பினர்களாக சுமார் பத்து லட்சம் பேர் இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

# உள்ளூராட்சி சேவை டிசம்பருடன் கலைப்பு

## மாகாண ஊழியருக்கு ஓய்வூதியம்

கொழும்பு, செப். 13

உள்ளூராட்சி சேவையை எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் கலைத்து விட அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது.

இப்போது உள்ளூராட்சி சேவையின் கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு மாகாண சபை அரச ஊழியர் சேவையில் சேர்ந்து கொள்ள [அவ்வூழியர்களின் தகுதிக்கேற்ப] சந்தர்ப்பம் வழங்குவது என்றும் அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

இதேவேளை, மாகாண சபை அரசாங்க ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்திருக்கிறது.

இது தொடர்பாக அமைச்சரவையின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபை அமைச்சரின் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் யோசனைகளுக்கு ஏற்ப ஓய்வூதிய அறிக்கையில் திருத்தங்களைக் கொண்டு வர அமைச்சருக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. [அ-எ]

## போராட்டம்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றன.

இந்தச் சுவரொட்டிகளை பொலீஸார் அகற்றிவருகின்றனர்.

இதேவேளை, கும்பம பகுதியின் ஜே. வி. பி. பிரதேசத் தலைவர்கள் எனப்படும் 7 பேர் கைதாகியுள்ளனர் என்றும் பெலியத்தையில் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஓ-த-3)

## சித்தாண்டியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாறு:-

★ ரி-56-1 ரகத் துப்பாக்கிகள் — 2

★ அவற்றிற்கான ரவைக் கூடுகள் — 5

★ ரவைகள் — ஆயிரத்து 460

★ எஸ். எல். ஆர். ரக துப்பாக்கிகள் — 7

★ அவற்றுக்குரிய ரவைக் கூடுகள் — 27

★ நேட்டோ ரக ரவைகள் — 360

★ 84 எவ். ரக துப்பாக்கிகள் — 3

★ அவற்றுக்குரிய ரவைக் கூடுகள் — 5

★ 5.56 ரக ரவைகள்—120

★ 0.38 ரக கைத்துப்பாக்கி — 1

★ ஏ. கே. எல். எம். ஜி. ரவைக்கூடுகள் — 4

★ அவற்றுக்குரிய ரவைகள் — 260

★ ஜே. ஆர். ரக கைக்குண்டுகள் — 5

★ தலைக் கவசங்கள் — 19

இதே வேளை — மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் போராளிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு பொலீஸார் கொல்லப்பட்டனர் என்றும் - வேறு பத்து பொலீஸாரும் 4 சிப்பாய்களும் அத்தாக்குதலில் படுகாயமடைந்தனர் என்றும் ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளரான கேணல் சரத் முனசிங்க நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஓ-எ-5)

## சர்வதேச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கு இல்லை.

ஸ்ரீலங்கா படையினர் பல சந்தர்ப்பங்களில் அகதி முகாம்களுக்குள் சென்று அப்பாவிகளை படுகொலை செய்துள்ளனர். வீடுகளுக்குள் பிரவேசித்து பலரைக் கொலை செய்துள்ளனர்.

எதிகளுக்கு உதவியவர்கள் என்ற சந்தேகத்தில் பல கிராமங்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளன. மனித உரிமைகளை மிதிப்பது என்பது ஸ்ரீலங்காவில் வழக்கமான ஒன்று.

### அரசின் கடமை

எது எவ்வாறாயினும், பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அந்த நாட்டு அரசின் கடமை என்ற சர்வதேச சட்டப்படி ஸ்ரீலங்கா மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்க அந்த நாட்டு அரசே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம்—

ஸ்ரீலங்காப் படைகளினால் பரவலாக மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதை ஒப்புக்கொண்டு அந்நாட்டு அரசாங்கம் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்றும்—

எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க இத்தகைய அறிக்கை அவசியமானது என்றும் அந்த அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் தமிழ்ப் போராளிகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### அரசு பரிசீலிப்பதாக பிரட்மன் தகவல்

இதேசமயம்—

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கையை ஸ்ரீலங்கா அரசு கவனமாகப் பரிசீலித்து வருகிறது என்றும்—

அரசின் பதில் விரைவில் எழுத்து மூலம் வெளியிடப்படும் என்றும் ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். [உ-ஓ-5]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் தேவராஜன்

(ஓய்வு பெற்ற நில அளவையாளர்)

நீர்வேலி, அகிலேசர் பதியைப் பிறந்தாமாகவும், கந்தர்மடத்தை தம் வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் தேவராஜன், ஓய்வு பெற்ற நில அளவையாளர், 10-09-1991 அன்று அவுஸ்திரேலியாவில் இலட்பிராப்தி அடைந்துள்ளார்.

அன்னார், பதுமதேவியின் பற்றான பிராண நாயகரும், சுஜிதன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), வைத்திய கலாநிதி சிவகுமாரன் (கனடா), வைத்திய கலாநிதி இராஜும் தேவேந்திரா (U. S. A.), ஜெயராமன் (விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்), ரெங்கன் (சொலிசிற்றர்—U K.), இராஜேஸ்வரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைத்திய கலாநிதி தேவேந்திரா (U.S.A.), நிர்த்தனகுமார் (அவுஸ்திரேலியா), ஜெயதேவி (ஆசிரியை), அமரர் கண்மணி (ஆசிரியை), சுகன்யா, தங்கலோஜினி ஆகியோரின் ஆசை மாமனாரும், உத்தமி, கார்த்திகா, வைதரனி, யமுனா, பரதன், ஸ்ரீராம், லக்ஷ்மன், பேபி நிர்த்தன் ஆகியோரின் பாசமுள்ள பாட்டனாரும், சரஸ்வதி, பஞ்சாட்சரம், அமரர்கள் நவரத்தினம், இராமநாதன், வீரசிங்கம் ஆகியோரின் உடன்பிறப்பும், புஷ்பமலர், சரஸ்வதி, விமலாதேவி, புஷ்பதேவி ஆகியோரின் அன்பான மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நியூ சவுத் வேல்ஸ், அவுஸ்திரேலியாவில் அமரரின் மனிஷ்— புத்திரியின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்க.

தகவல்:

257, அரசடி வீதி, கந்தர்மடம்.

த. ந. பஞ்சாட்சரம்

(4295)

---

## கணபதி அப்புக்குட்டி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், யாழ். நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். திறவுண் சலூன் உரிமையாளர் திரு. கணபதி அப்புக்குட்டி அவர்கள் காலமானார். இவர் வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் தாபகரும், முன்னாள் தலைவரும், சுடரொளி சனசமூக நிலையத்தின் போஷகரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (13 - 09 - 91) காலை 10-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலைத் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

அ. ஞானப்பிரகாசடாஸ்

(மகன்)

இல;596/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(18091)

---

## அம்பலவாணர் இராசையா

இருபாலையைப் பிறப்பிடமாகவும் கண்டிக்குளியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய அம்பலவாணர் இராசையா (இளைப்பாறிய சித்திர விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) இலபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிவபாக்கியத்தின் (இளைப்பாறிய ஆசிரியை, கண்டிக்குளி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும்) லோகநாதன் (Hatton National Bank, Jaffna), ரதி (ஆசிரியை, கண்டிக்குளி மகளிர் கல்லூரி). பிரேமரூபன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பொன்னம்பலம், தில்லைநாதன், திருமதி ரத்தினம் மாணிக்கம், திருமதி திருவிளங்கம் நவரத்தினம், காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

70, குறோசேற் ஒழுங்கை, கண்டிக்குளி.

தகவல்: மகன்

(C/0496)

---

## மணியர் அம்பலவாணர்

[கிளாக்கர்]

காரைநகர் கோவளத்தை சேர்ந்தவரும் தற்போது 89/1 பிறவுண் வீதியில் வசித்தவருமான ம. அம்பலவாணர் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும், திருச்சிற்றம்பலம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), தியாகராசா [இளைப்பாறிய ஆசிரியர்], காலஞ்சென்ற திருநாவுக்கரசு, திருஞானசம்பந்தன், திருநீலகண்டன் [பிராந்திய முகாமையாளர் டார்லி பட்லர் அன் கோ லிமிட்], திருவாதவூரர் [பொறியியலாளர்-லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சாவித்திரிதேவி, மஹாலக்ஷ்மி, பராசக்தி, ராஜேஸ்வரி, தெய்வீகராணி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [13-9-91] காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

89/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அ. திருச்சிற்றம்பலம்

(18098)

---

பிரேமதாஸா நடத்தத் தவறினால்

# சர்வஜன வாக்கெடுப்பை லலித் குழுவே நடத்துமாம்!

கொழும்பு, செப். 13

''இன்றைய அரசியல் நெருக்கடிக்கு மக்களின் தீர்ப்பை அறிந்து கொள்ள, சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதாக ஜனாதிபதி பிரேமதாச கூறியுள்ளார்.

அவர் சர்வசன வாக்கெடுப்பை நடத்தாவிட்டால், அதை நாம் நடத்தியே தீருவோம்.''

ஐ. தே. க. அதிருப்தியாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை நுகேகொடையில் நடத்திய கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி இவ்வாறு கூறினார்.

பெருந்திரளான மக்கள் மத்தியில் அத்துலத் முதலி உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டுமா அல்லது நாடாளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமா என்பதே இன்றைய நெருக்கடி நிலையாகும்.

இதற்கு எமது மக்களே தீர்ப்பு வழங்க வேண்டும்.

### கூட்டத்திற்குள் எம். பிக்கள்

குவரோட்டிகள் மூலம் என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யுமாறு நான் பகிரங்கமாக சவால் விடுக்கிறேன். எந்த மகாராஜாவுக்கும் நான் அடிமையாக இல்லை.

இந்தக் கூட்டத்திற்குள் எம். பிக்கள் பலர் உள்ளனர். அவர்கள் உரிய நேரத்தில் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.

ஜனாதிபதிக்கு அளவுக்கு மிஞ்சிய அதிகாரங்கள் இருக்கும் காரணத்தினால், நாடாளுமன்ற அமர்வை அவர் ஒத்திவைத்தார். இது போன்ற ஜனநாயக விரோத செயல்களையே நாம் வெறுக்கிறோம்—என்றார்.

### காமினி உரை

திரு. காமினி திஸாநாயக்க உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஐ. தே. கட்சி தனிப்பட்ட சொத்தல்ல. நாடாளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென கோரியே நாம் போராட்டம் நடத்துகிறோம்.

விஜேவீர இன்று உயிருடன் இருந்திருந்தால் பல இரகசிய உண்மைகள் வெளிவந்திருக்கும் — என்றார்.

முன்னாள் அமைச்சரான ஜி. எம். பிரேமச்சந்திர, எம். பிக்களான வீரவன்னி சமரவீர, பிரேமரத்ன குணசேகர ஆகியோரும் உரையாற்றினர்.

[ஒ-த-3]

---

### பேச்சு

மன்னார் வளைகுடாக் கடலில் பெற்றோலிய வள ஆய்வு வேலைகளை மேற்கொள்வது சம்பந்தமாக இந்திய - இலங்கை அரசுகளிடையே தொடர்ந்தும் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

எரிசக்தி வல அமைச்சர் சந்திரா பண்டார செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

இந்திய அரசின் கீழ் இயங்கும் இரு அமைப்புகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

### கூட்டம்

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ)

---


திருமறைக் கலாமன்றம் வழங்கும்

# "இசை மாலை"

இணைப்பு

## புறம் 279 - 278

(நாடகம்)

காலம்: 14 - 9 - 91 (சனி) மாலை 6-45 மணி

தயாரிப்பு:

**திருமறைக் கலாமன்றம்**

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

நிகழ்ச்சி ஒரு நாள் மட்டுமே இடம்பெறுவதால் ஆசனம் விரும்புவோர் முன்னதாகவே அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(0495)

---

# NEW SCIENCE ACADEMY

IN FRONT OF ELILAGAM — JAFFNA.

## 92 A/L

புதிய பிரிவுகள்:

PHYSICS - சோதிலிங்கம்
Mechanics - Sat., Sun. - 6- 30
Heat - பிரிவு i Sat., Sun. - 1- 00
- பிரிவு ii Sat., Sun. - 4- 00

PHYSICS - கணேசன்
Heat - Sat., Sun. - 9- 00
Electricity - Sat., Sun. - 6- 30

CHEMISTRY - சண்
Mon., Wed., Tue. - 6- 30 - IN - Organic

CHEMISTRY - மணியம்
In- Organics - Sat., Sun 11- 00
- பிரிவு ii Sat., Sun. - 2- 00

PURE / APPLIED } MATHS - வெக்டர்
சார்பு வேகம் -
நுண் கணிதம் - எல்லைகள் வகையீடு

(இ-0489)

---

# மருத்துவ சேவை

தலைமயிர் உதிர்கின்றதா? தலைமுடி நரைக்கின்றதா? நரம்புத் தளர்ச்சியா? வாத ரோகமா? தேக பருமனா? மாதவிடாய்க் கோளாறுகளா? கவலை வேண்டாம்.

நாடுங்கள் ! நலமடையுங்கள் !!

டாக்டர் த. சிவானந்தன்
D A. M., R. A. M P. (SRI LANKA)

"சிவா வைத்தியசாலை"

384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

(18096)

---

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி

# ★ பட்டப் படிப்புகள் ★

## G. A. Q

(கலை முதற் தேர்வு)

மாலை நேர விரிவுரைகள்

(3 மணிமுதல் 6 மணிவரை)

விரிவுரைகள் ஆரம்பம்:-

25 - 09 - 1991 புதன்கிழமை

பல்கலைக்கழக விண்ணப்ப முடிவுத் திகதி:

30 - 09 - 1991

★ G. C. E. உயர்தர வகுப்பில் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

★ பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் எமது கல்லூரியில் 30 - 09 - 91 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

நிர்வாகி

**தொடர் கல்வி நிலையம்,**

உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம்.

[சி-0498]


---

# கண்ணீர் அஞ்சலி

## நமசிவாயம் தேவராஜன்

[இளைப்பாறிய நில அளவையாளர்]

தோற்றம்: 19 04-1927

அவுஸ்திரேலியாவில் அமரத்துவம்: 10-09-1991

வணிக முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் திரு. தே. ஜெயராமன் அவர்களின் தந்தையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சக விரிவுரையாள நண்பர்கள்

வணிக முகாமைத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(18093)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org